வான் மறைகள் மீதான ஈமான்

மக்காஹ்வின் குடியிருப்புகளிலிந்து சற்று தூரமாகவே, ஹிரா குகையில் இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் தனிமையில் அல்லாஹ்வைத் தியானித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நாள் திடீரென ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் தோன்றினார்கள், மேலும் கூறினார்கள், முஹம்மத் ﷺ அவர்களே படியுங்கள். இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர்கள் கூறினார்கள், என்னால் படிக்க இயலாது. ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்களை இறுகப்பிடித்து அணைத்துக் கூறினார்கள், படியுங்கள். அவர்கள் ﷺ மீது ஒருவித நடுக்கம் ஏற்பட்டது, கூறினார்கள், எனக்குப் படிக்க இயலாது. ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் மூன்று முறை இவ்வாறே செய்தார்கள், அவர்களும் ﷺ அதே பதிலைத் தந்தார்கள். இறுதியில் ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் கூறினார்கள்:

اقْرَأْ بِاسْمِ رَبِّكَ الَّذِي خَلَقَ ﴿١﴾ (العلق:1)

பொருள்: (நபியே), ஓதுவீராக, படைத்த உம் இறைவனின் திருப்பெயரைக் கொண்டு (அல் அலஃக்:1)

இந்த நிகழ்விற்குப் பிறகு ஹஜ்ரத் ஜிப்ரீல் (அ) அவர்கள் மறைந்துவிட்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்களுடைய நிலை முற்றிலும் மாறிவிட்டது, அவர்கள் அச்சத்தின் காரணமாக நடுங்கிக்கொண்டிருந்தார்கள், வியர்வைக் கொட்டிய நிலையில் வீட்டிற்குத் திரும்பினார்கள், மேலும் கூறினார்கள்: زَمِّلُوْنِي زَمِّلُوْنِي *என்னைப் போர்த்துங்கள், என்னைப் போர்த்துங்கள்* (புக்ஹாரி)

அவர்களுடைய ﷺ மனைவியான ஹஜ்ரத் க்ஹதீஜா (ர) அவர்கள் அவர்களைக் ﷺ கம்பிளியால் போர்த்தி ஆறுதலளித்தார்கள். இவ்விதமாக, இந்தப் பூமியின் மீது அல்லாஹ்வின் அடியார்களை அவனை அடிபணிந்து வணங்குவதற்காக முறையாக அழைக்கும் வகையிலும் மறுமைநாள் வரையில் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த மார்க்கம் இறுதி மார்க்கமாக நிலைத்திருக்கும் வகையிலும் அல்லாஹ் தஆலாவின் இறுதி நபி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அனைத்து மக்களுக்கும் நேர்வழியின்பால் வழிகாட்டுதலாக அமையும் அந்தத் திருக்ஃகுர்ஆனின் முதன்முதலான அருள்வாக்காக (வஹி) அமைந்தது இதுதான். இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களுடைய நபித்துவத்தின் அற்புத அத்தாட்சியாகவும் அமைந்ததோடு உலகத்திலுள்ள மனிதர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தும் இதனைப் போன்ற ஒரு வசனத்தைக்கூட கொண்டுவரமுடியாத வகையில் அற்புதமான அருள்வாக்குகளாகவும் அமைந்தது. இந்தக் ஃகுர்ஆன் இவ்வுலகி

www.uzaifalahi.com

லுள்ள அனைத்து மனித இனத்தினருக்கும் நேர்வழிக்கான வழிகாட்டுதலின் ஒரே ஆதாரமாகும். அல்லாஹ் தஆலா இதற்கு முன்பாகவும் பல நபி மார்களுக்கு அந்தந்த மக்களுக்காக பல்வேறு வேதங்களை அருளியிருந்த போதிலும், ஒரு முஃமினானவன் திருக்ஃகுர்ஆன்மீது நம்பிக்கை கொள் வதுடன் இதற்குமுன்பு அருளப்பட்ட அனைத்து வேதங்களின்மீதும் ஈமான் கொள்வது கட்டாயமானதாகும். முன்பு அருளப்பட்ட வேதங்களில் பிரபலமானவை: தவ்ராத், ஜ்ஸபூர், இன்ஜீல் மற்றும் ஸுஹுஃபு இப் ராஹீம் எனப்படும் அருள்வாக்குகளாகும். இவற்றைத் தவிரவும் பல வேதங்கள் அருளப்பட்டுள்ளன, ஆனால், அவற்றின் பெயர்கள் திருக்ஃகுர் ஆனில் கூறப்படவில்லை. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

كَانَ ٱلنَّاسُ أُمَّةً وَٰحِدَةً فَبَعَثَ ٱللَّهُ ٱلنَّبِيِّـۧنَ مُبَشِّرِينَ وَمُنذِرِينَ وَأَنزَلَ مَعَهُمُ ٱلْكِتَـٰبَ بِٱلْحَقِّ لِيَحْكُمَ بَيْنَ
ٱلنَّاسِ فِيمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ ۚ وَمَا ٱخْتَلَفَ فِيهِ إِلَّا ٱلَّذِينَ أُوتُوهُ مِنۢ بَعْدِ مَا جَآءَتْهُمُ ٱلْبَيِّنَـٰتُ بَغْيًۢا بَيْنَهُمْ ۖ
فَهَدَى ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُوا۟ لِمَا ٱخْتَلَفُوا۟ فِيهِ مِنَ ٱلْحَقِّ بِإِذْنِهِۦ ۗ وَٱللَّهُ يَهْدِى مَن يَشَآءُ إِلَىٰ صِرَٰطٍ مُّسْتَقِيمٍ ﴿٢١٣﴾
(البقرة: 213)

பொருள்: *(தொடக்கத்தில்) மக்கள் அனைவரும் ஒரே கொள்கைவழி நடக் கும் சமுதாயத்தினராகவே இருந்தனர். பின்னர் (இந்நிலை நீடிக்கவில்லை, அவர்களிடையே கருத்துவேறுபாடுகளும் பிணக்குகளும் தோன்றவே, நேர்வழியில் செல்வோருக்கு) நற்செய்தி அறிவிப்போராகவும் (தீய வழி யில் செல்வோருக்கு) எச்சரிக்கை செய்பவர்களாகவும் அல்லாஹ் நபிமார் களை அனுப்பிவைத்தான். மேலும், மக்கள் கருத்துவேறுபாடு கொண்ட விஷயங்களில் அவர்களிடையே தீர்ப்பு வழங்கவேண்டும் என்பதற்காக, சத்திய வேதங்களையும் அந்த நபிமார்களுடன் அல்லாஹ் அருளினான். ஆனால், (இவ்வேற்றுமைகள் தோன்றியது தொடக்கத்தில் மக்களுக்கு சத்தியம் இன்னதென்று தெளிவு படுத்தப்படாததினால் அல்ல, மாறாக) எவர்களுக்கு சத்தியத்தைப்பற்றிய அறிவு வழங்கப்பட்டதோ அவர்கள்தாம் வேற்றுமையைத் தோற்றுவித்தனர். தம்மிடம் தெளிவான வழிகாட்டு தல்கள் வந்துவிட்ட பின்னரும் ஒருவர்மீதொருவர் கொடுமை புரியும் பொருட்டு (சத்தியத்தைக் கைவிட்டு) வேற்றுமைகளைத் தோற்றுவித்தனர். எனவே, சத்தியத்தைக் குறித்து அவர்கள் பிணங்கிக்கொண்டிருந்த விஷயங் களில் (நபிமார்கள்மீது) நம்பிக்கை கொண்டோருக்கு தன் உத்தரவினால் அல்லாஹ் நேர்வழியைக் காட்டினான். மேலும், தான் நாடியோரை அல்லாஹ் நேரான வழியில் செலுத்துகிறான் (அல் பஃகரஹ்:213)*

* * *

www.uzairfalahi.com